**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.460 /2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 9 |
| Name (திரு/திருமதி) | : ஸ்ரீராம் |
| Father's Name/ Husband's Name | : சீத்தாராமன் |
| Village & Taluk | : மேல்மலையனூர் |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Age | : 62 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025**

1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 13.11.2015ம் தேதி நான் சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 13.30 மணிக்கு செஞ்சி அரசு மருத்துவ மனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று செஞ்சி அரசு ம.மனை சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1(பழனி) என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே நிலையம் வந்து நிலைய குற்ற எண். 109/2015 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii)-ன் கீழ் மு.த.அ பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ-7-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு நான் அன்றைய தினமே 16.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வடமலைபிள்ளை, பக்கிரிசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் பழனி, ஜெயக்குமார், ஆண்டாள், அமராவதி ஆறுமுகம், சீனு, ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடும்போது அவர்கள் முன்பிணையில் சென்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்யவில்லை.

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த நபர்களான பழனி, விஜயகுமார், ஆண்டாள், அமராவதி, ஆகியோர்களுக்கு சிகிச்சை வழங்கிய செஞ்சி அரசு ம.ம

மருத்துவர் திரு. முத்துவேல் என்பவரை விசாரித்து பழனி, விஜயகுமார், ஆண்டாள், அமராவதி, ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச் சான்று பெற்றேன். மேற்படி காயச் சான்றில் பழனி, விஜயகுமார், ஆண்டாள், அமராவதி, ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்பகாயம் என கூறி சான்று வழங்கினார்.

பின்பு மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு. வரதன் என்பவரிடம் வழக்கு கோப்புகளை ஒப்படைத்தேன்.

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எதிரிகளுக்கும் புகார்தாரரின் குடும்பத்தின் இடையே வழி நடைபாதை தொடர்பாக பல ஆண்டுகளாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் குற்ற எண் மற்றும் குற்ற எண்.108/2015 ஆகிய இரண்டு வழக்குகளிலும் நான் தான் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இரண்டு வழக்குகளிலும் சம்பவ இடத்தை நான் தான் பார்வையிட்டேன் என்றால் சரிதான். இரண்டு வழக்கிற்காகவும் ஒரே நாள் ஒரே நேரத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து ஒரே நபர்களை விசாரித்து சாட்சிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

2. இரண்டு வழக்குகளிலும் சம்பவ இடம் ஒன்று தான் என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளிலும் சம்பவ இடம் என்பதை வெவ்வேறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு தொடர்பாக காயம் ஏற்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்தேன். மருத்துவரிடம் காயமடைந்த நபர்கள் அனைவரும் அவர்களை சுமார் 10 நபர்கள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரிதான். அ.சா.1 புகார் வாக்குமூலத்திலும், என்னுடைய விசாரணையின்போது எதிரிகள் மூவர் மட்டும் தாக்கியதாக குறிப்பிட்டார் என்றால் சரிதான். மருத்துவர்களிடம் குறிப்பிட்டுள்ள நபர்களில் மூன்று நபர்கள் போக மீதம் 7 நபர்கள் யார் என்ற விவரம் எனது விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான்.

3. மேற்குறிப்பிட்ட குற்ற எண் கொண்ட CC.No. 432/2018 என்ற வழக்கில் பார்வை மகசர் தயார் செய்யப்பட்ட நேரம் ஒரு விதமாகவும், இந்த வழக்கில் வேறு ஒரு நேரத்தையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து வழக்காவணங்களை தயார் செய்தேன் என்றாலும், எனவே தான் இரு வழக்குகளிலும் வெவ்வேறு சம்பவ இடத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும்,

அ.சா.1 கொடுத்த பொய் புகாரை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B. Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.